அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

## ஆண்டு 4

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**
(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**
12

சுட்டெண்: | | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.

1. உயிர் எழுத்துகளின் எண்ணிக்கை

☐ 10 ☐ 12 ☐ 18

2. தந்தன் என்பதன் எழுத்து வழக்கு

☐ தந்தேன் ☐ தந்தான் ☐ தந்தாய்

3. முக்கனிகளுள் ஒன்று

☐ மாதுளம்பழம் ☐ வாழைப்பழம் ☐ தோடம்பழம்

4. பூனை கத்தும். அது போல நாய்

☐ குரைக்கும் ☐ கனைக்கும் ☐ பிளிறும்

5. வெந்நீர்க் கிணறுகள் உள்ள இடம்

☐ கன்னியா ☐ யாழ்ப்பாணம் ☐ மன்னார்

6. பாகற்காய் கசக்கும். அதுபோல கரும்பு

☐ உவர்க்கும் ☐ இனிக்கும் ☐ புளிக்கும்

7. உறவு என்பதன் எதிர்ப்பொருட் சொல்

☐ நட்பு ☐ பகை ☐ கொடை

8. கடலலை என்பதைப் பிரித்து எழுதினால்

☐ கடல் + அலை ☐ கட + அலை ☐ கடலில் + அலை

9. தந்தைக்குத் தாய் போல பாட்டனுக்கு

☐ தோழி ☐ தோழன் ☐ பாட்டி

10. தொலைபேசியைக் கண்டுபிடித்தவர்

☐ மார்க்கோணி ☐ கிரகம் பெல் ☐ சாமுவேல் மோர்சு

11. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவான். அவன்

☐ மெழுகுதிரி ☐ தீ ☐ கதிரவன்

12. அவன் மரத்தில் ஏறினான். அவர்கள் மரத்தில்

☐ ஏறின ☐ ஏறினார்கள் ☐ ஏறியது

13. சரியான சொல்லாக அமைவது

☐ எண்னெய் ☐ எண்நெய் ☐ எண்ணெய்

14. மரம் + வேர் என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ மரம்வேர் ☐ மரவேர் ☐ மாவேர்

15. தொன்மைச் சிறப்பு உடைய தோற்கருவிகளுள் ஒன்று

☐ யாழ் ☐ பறை ☐ தாளம்

16. பறவை பறந்தது. இதில் பறந்தது என்பது

☐ இறந்தகாலம் ☐ நிகழ்காலம் ☐ எதிர்காலம்

17. உலகின் தொன்மையான மொழிகளுள் ஒன்று

☐ ஆங்கிலம் ☐ தமிழ் ☐ பிரஞ்சு

18. தமிழரது வீரத்துக்குச் சான்றாக அமைவது

☐ கருங்கற்கள் ☐ நடுகற்கள் ☐ செங்கற்கள்

19. 50 என்பதன் எழுத்து வடிவம்

☐ ஐம்பது ☐ அம்பது ☐ அன்பது

20. நீருந்துகளுள் ஒன்று

☐ மிதியுந்து ☐ கப்பல் ☐ விண்ணுந்து

20 X 1 = 20 புள்ளிகள்

## 2 பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.

1. ஆசிரியர் ________ அழைத்தார்.
   (மாணவனை, மாணவனுக்கு)

2. திருக்குறள் ________ இயற்றப்பட்டது.
   (திருவள்ளுவரின், திருவள்ளுவரால்)

3. மழை பெய்தது. ________ சிறுவர்கள் மழைநீரில் விளையாடினார்கள்.
   (இப்பொழுது, அப்பொழுது)

4. இயற்கை தந்த கொடைகள் பல. ________ காடுகளும் ஒன்று.
   (அவற்றுள், இவற்றுள்)

5. அப்பா ________ முயற்சியைப் பாராட்டினார்.
   (என்னுடைய, எனக்கு)

5 X 2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

| ஆங்கிலம்: | யேர்மனி: | நோர்வே: |
|---|---|---|
| 1. War | 1. Krieg | 1. Krig |
| 2. Truth | 2. Wahrheit | 2. Sannhet |
| 3. Week | 3. Woche | 3. Uke |
| 4. Wind | 4. Wind | 4. Vind |
| 5. Slide | 5. Rutsche | 5. Sklie |

| இத்தாலி: | நெதர்லாந்து: | டென்மார்க்: |
|---|---|---|
| 1. Guerra | 1. Oorlog | 1. Krig |
| 2. Verità | 2. Waarheid | 2. Sandhed |
| 3. Settimana | 3. Week | 3. Uge |
| 4. Vento | 4. Wind | 4. Vind |
| 5. Scivolo | 5. Glijbaan | 5. Glide |

| சுவீடன்: | பின்லாந்து: | தமிழ்: |
|---|---|---|
| 1. Krig | 1. Sota | 1. |
| 2. Sanning | 2. otta | 2. |
| 3. Vecka | 3. Viikko | 3. |
| 4. Vind | 4. Ilmaa | 4. |
| 5. Rutschkana | 5. liukumäki | 5. |

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியில் எழுதுக.

தாவித்தாவி | விடிய விடிய | துள்ளித்துள்ளி | மடமட | கிடுகிடு

1. தம்பி ______________ என்று தண்ணீர் குடிக்கிறான்.
2. ஈழத்தில் கூத்துகள் ______________ நடைபெறும்.
3. மான் ______________ ஓடியது.
4. சிறுமி குளிரினால் ______________ என நடுங்கினாள்.
5. குரங்குகள் மரத்தில் ______________ ப் பாய்ந்தன.

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.

1. செய் | செய்வன | திருந்தச்

______________

2. ஆசிரியர் | திருத்தினார் | கட்டுரையைத்

______________

3. பாட்டுப் | பாடினார்கள் | மாணவர்கள் | இனிமையாகப்

______________

4. சென்றது | உணவு | கொக்கு | தேடிச்

______________

5. பள்ளிக்குச் | நான் | சென்றேன் | ஓடியோடிப்

______________

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழரது கொண்டாட்டங்களுள் ஒன்று எழுதுக.

_______________________________________________

2. கற்றவருக்கு எங்கே சிறப்பு உண்டாகும்?

_______________________________________________

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

ஆண்பால்: ____________________ பெண்பால்: ____________________

4. வினாச்சொற்கள் இரண்டு எழுதுக.

____________________

____________________

5. நூல்களை இரவல் பெறக்கூடிய இடம் எது?

_______________________________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

5 X 3 =15 புள்ளிகள்

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1** **பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

கோதையுடைய வீட்டின் பின்புறத்தில் அழகான சிறிய தோட்டம் ஒன்று உள்ளது. அந்தத் தோட்டத்தில் ஒரு பக்கம் பழமரங்கள் காணப்பட்டன; மறுபக்கம் அழகான பூக்களுடன் பூஞ்செடிகள் காணப்பட்டன. பழமரங்களில் இருந்த பறவைகள் 'கீச் கீச்' என்று கத்திக் கொண்டிருந்தன. கோதையின் செல்ல உயிரிகளான நாய்க்குட்டியும் பூனைக்குட்டியும் பூஞ்செடிகளுக்கு இடையே ஓடித் திரிந்தன. அப்பொழுது கோதை செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தாள்.

1. கோதையுடைய தோட்டம் எங்கே உள்ளது?

___________________________________________

2. அழகான பூக்களுடன் காணப்பட்டவை எவை?

___________________________________________

3. பறவைகள் எவ்வாறு கத்திக் கொண்டிருந்தன?

___________________________________________

4. கோதையின் செல்ல உயிரிகள் எவை?

___________________________________________

5. கோதை என்ன செய்து கொண்டிருந்தாள்?

___________________________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 2 அறிவுறுத்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.



**மாவீரர்நாள் 2024**

# ஓவியப் போட்டி

போட்டி நடைபெறும் நாள்: 18 நவம்பர் 2024
தொடக்க நேரம்: 15:00 மணி
இடம்: பள்ளி மண்டபம், இங்கிலாந்து
போட்டிக்கான பிரிவுகள்: கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு
தொடர்புகளுக்கு: 00 44 79800 67198

1. இது மாவீரர்நாளுக்கான ஓவியப் போட்டி. (      )
2. இப்போட்டி பிரான்சில் நடைபெறும். (      )
3. ஓவியப் போட்டி 18:00 மணிக்கு தொடங்கும். (      )
4. போட்டிக்கான பிரிவுகளுள் ஒன்று மேற்பிரிவு. (      )
5. ஓவியப் போட்டி நவம்பர் மாதத்தில் நடைபெறும். (      )

5 X 1 = 5 புள்ளிகள்

## பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

### எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

### வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2024

# தமிழ்

## ஆண்டு 5

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: 01.06.2024

**மொத்தப்புள்ளிகள்: 100**

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

**பக்கங்கள்**

12

சுட்டெண்: | | | | | | | | | | |

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.

1. இன்கலைகளுள் ஒன்று

☐ கரகம் ☐ காவடி ☐ சிற்பம்

2. பெயர்ச் சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டு

☐ வந்தான் ☐ கார்த்திகை ☐ படித்தாள்

3. ஒழுக்கம் பற்றிக் கூறும் அறநூல்

☐ திருக்குறள் ☐ சிலப்பதிகாரம் ☐ குயில்பாட்டு

4. மரம் என்பதன் பன்மை

☐ மரம்கள் ☐ மரங்கள் ☐ மரக்கள்

5. பூ + சாடி என்பதைச் சேர்த்து எழுதினால்

☐ பூசாடி ☐ பூம்சாடி ☐ பூச்சாடி

6. அழிவு இல்லாத நிலையான செல்வம்

☐ கல்வி ☐ பணம் ☐ வீடு

7. பவளக்கொடி என்ற பாடலைப் பாடியவர்

☐ பாரதியார் ☐ பாரதிதாசன் ☐ சோமசுந்தரப்புலவர்

8. ஓடுறன் என்பதன் எழுத்துவழக்கு

☐ ஓடுகிறேன் ☐ ஓடுகிறான் ☐ ஓடினான்

9. ஆண்டின் முதல் மாதம்

☐ மாசி ☐ பங்குனி ☐ தை

10. யானைக்குப் பந்தி போல ஆட்டுக்கு

☐ கூட்டம் ☐ மந்தை ☐ நிரை

11. இளங்கோவடிகளால் எழுதப்பட்ட நூல்

- [ ] சிலப்பதிகாரம்
- [ ] ஆத்திசூடி
- [ ] குயில்பாட்டு

12. சிரிக்கிறேன் என்பது

- [ ] முன்னிலை
- [ ] படர்க்கை
- [ ] தன்மை

13. கூல வகைகளுள் ஒன்று

- [ ] சோளம்
- [ ] மிளகு
- [ ] கிழங்கு

14. பாலாவி என்ற ஆறு ஓடுகின்ற இடம்

- [ ] முல்லைத்தீவு
- [ ] வவுனியா
- [ ] மன்னார்

15. மானின் ஆண் கலை போல குரங்கின் ஆண்

- [ ] அலவன்
- [ ] கடுவன்
- [ ] எருது

16. செவிமடுத்தல் என்ற மரபுத்தொடர் குறிப்பது

- [ ] ஆர்வமாகக்கேட்டல்
- [ ] உதவுதல்
- [ ] மதிப்பளித்தல்

17. ஆவினங்களைப் போற்றி வணங்குவது

- [ ] ஆடிப்பிறப்பு
- [ ] தைப்பொங்கல்
- [ ] மாட்டுப்பொங்கல்

18. வருவேன் என்பதன் எதிர்மறை

- [ ] வருகிறேன்
- [ ] வந்தேன்
- [ ] வரமாட்டேன்

19. ஐந்து வீட்டுக்கு ஒரு முற்றம். அது

- [ ] உள்ளங்கை
- [ ] வாய்
- [ ] மூக்கு

20. ஒலிம்பிக் கொடியில் உள்ள வளையங்கள்

- [ ] நான்கு
- [ ] ஐந்து
- [ ] ஆறு

20 X 1 = 20 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள சொல்லியங்களின் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை ஆகியவற்றைத் தெரிவுசெய்து எழுதுக.

1. எலிகள் வலையை அறுத்தன.
2. அப்பா நல்ல பழங்களை வாங்கினார்.
3. தமிழரசி நாள்தோறும் செய்தித்தாளை வாசிப்பாள்.
4. ஆசிரியர் மாணவனை அழைத்தார்.

| | எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|---|
| 1. | எலிகள் | | |
| 2. | | | |
| 3. | | செய்தித்தாளை | |
| 4. | | | |

10 X1 = 10 புள்ளிகள்

## 3 பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

உரையாற்றினான் | வாழ்கின்றன | சென்றேன் | இயற்றப்பட்டது | உயரமானது

1. இவ்வுலகில் எண்ணற்ற உயிரினங்கள் ______________________.
2. நான் உணவகத்துக்குச் ______________________.
3. இமயமலை மிகவும் ______________________.
4. மாணவன் மேடையில் நின்று ______________________.
5. ஆத்திசூடி ஔவையாரால் ______________________.

5 X 2 = 10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஆங்கிலம்:**
1. Victory
2. Gold
3. Crab
4. Market
5. Sun

**யேர்மனி:**
1. Sieg
2. Gold
3. Krebs
4. Markt
5. Sonne

**நோர்வே:**
1. Seier
2. Gull
3. Krabbe
4. Marked
5. Sol

**இத்தாலி:**
1. Vittoria
2. Oro
3. Granchio
4. Mercato
5. Sole

**நெதர்லாந்து:**
1. Winst
2. Goud
3. Krab
4. Markt
5. Zon

**டென்மார்க்:**
1. Sejr
2. Guld
3. Krabbe
4. Marked
5. Sol

**சுவீடன்:**
1. Seger
2. Guld
3. Krabba
4. Torg
5. Sol

**பின்லாந்து:**
1. Menestys
2. Kulta
3. Rapu
4. Tori
5. Aurinko

**தமிழ்:**
1.
2.
3.
4.
5.

5 X 2 = 10 புள்ளிகள்

## 5 அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. வானதி ______________க் கொய்து மாலை கட்டினாள். (பூக்கள்)
2. இனியன் பொருள்கள் வாங்க ______________ச் சென்றான். (அங்காடி)
3. கட்டுரை ______________ எழுதப்பட்டது. (கயல்விழி)
4. செல்வியும் ______________ இணைபிரியாத நண்பிகள். (குழலி)
5. அருவி ______________ வீழ்கின்றது. (மலை)

5 X 2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தமிழரது ஓவியக் கலைக்குச் சிறந்த சான்றாக விளங்குவது எது?

______________________________________________

2. சுவையைக் கூட்டும் உணவுப் பொருள்கள் இரண்டு எழுதுக.

______________________________________________

3. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படுகின்றன?

______________________________________________

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

பலர்பால்: ______________________________________________

ஒன்றன்பால்: ______________________________________________

5. தரப்பட்டுள்ள சொற்கள் காட்டும் காலத்தை எழுதுக.

பாடினான்: ______________________________________________

நீந்துகின்றன: ______________________________________________

5 X 2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழர் கலைகள்
2. தைத்திருநாள்
3. எனது பொழுதுபோக்கு

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

## 1 பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

உலகில் வாழும் உயிரினங்களுள் விலங்குகளும் அடங்குகின்றன. இவை வீட்டு விலங்குகள், காட்டு விலங்குகள் என இருவகைப்படுகின்றன. வீட்டில் அன்பாக வளர்க்கும் நாய், பூனை, ஆடு, மாடு போன்றன வீட்டு விலங்குகள் ஆகும். சிலர் வீடுகளில் செல்ல உயிரிகளாக வீட்டு விலங்குகளை வளர்ப்பார்கள். சிங்கம், புலி, கரடி, யானை போன்றன காட்டு விலங்குகள். மக்கள் பார்ப்பதற்காக விலங்குகளை வைத்திருக்கும் இடத்தை விலங்ககம் என்பார்கள். விலங்ககத்தில் காட்டு விலங்குகளைக் கூண்டுகளில் அடைத்து வைத்திருப்பார்கள். அவற்றைப் பார்க்க அச்சமாக இருக்கும். விலங்ககத்தில் உள்ள குரங்குகளைப் பார்க்க மிகவும் வேடிக்கையாக இருக்கும். விலங்ககத்திற்குச் செல்வது என்றால் சிறுவர்களுக்கு நல்ல விருப்பம்.

1. விலங்குகளின் வகைகள் எவை?

______________________________

______________________________

2. வீட்டில் வளர்க்கும் விலங்குகள் இரண்டு எழுதுக.

______________________________

3. காட்டு விலங்குகளை எவற்றில் அடைத்து வைத்திருப்பார்கள்?

______________________________

4. விலங்ககத்தில் எவற்றைப் பார்க்க வேடிக்கையாக இருக்கும்?

______________________________

5. சிறுவர்களுக்கு எங்கே செல்ல விருப்பம்?

______________________________

______________________________

5 X 2 = 10 புள்ளிகள்

**2** தரப்பட்டுள்ள அறிவித்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.




1. பந்தெறிதல் தனி விளையாட்டாக நடைபெறும். ( )
2. விளையாட்டுப்போட்டி சோதியா தமிழ்ப்பள்ளியில் நடைபெறும். ( )
3. விளையாட்டுப்போட்டி 10:00 மணிக்குத் தொடங்கும். ( )
4. இல்லங்களுள் ஒன்று திலீபன். ( )
5. கிளித்தட்டு தனி விளையாட்டு ஆகும். ( )

5 X 1 = 5 புள்ளிகள்

## பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

### எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

### வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |